முருகப்பெருமான் துணை

**மகான் மயூரேசர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.01.2023, வியாழக்கிழமை

1. கந்தமகா ஞான குருவே
கருணைவடிவாக வந்த குருவே
சிந்தைவைத்து உன்வழி மக்கள்வர
சித்திகள் அடைவர் என்று கூறி
2. கூறியே அனுகூல ஆசிதனை
குறைவிலா சுபகிருது சிலைதிங்கள்
இருபானோர் திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 21 ம் நாள் 05.01.2023, வியாழக்கிழமை)
இயம்பிடுவேன் மயூரேசர் யானும்
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான ஞான வழி காட்டும்
ஞான தேசிகனே கலியினில் சிறந்த குரு
நன்மைதனை மக்களெல்லாம் அடைய
4. அடையவே பிரணவக்குடில் படைத்து
ஆற்றல்பட தீட்சை அருள
தடையின்றி மக்களெல்லாம் வந்து
தவராஜன் திருவடி பற்றி ஏற்க
5. ஏற்கவே வினைகள் விலகி
எக்கணமும் நல்வினை பெருக
உற்றதொரு சேவை வழிகளில் வந்து
உயர் தருமம் தனை செய்திடவே
6. செய்திடவே அவரவர் பிறவிப்பயனை
சிவராஜயோகி ஆசிபட
மெய்ஞானமாக முழுமை சக்தியாக
முக்திகயாகவே கண்டுத் தேறுவர்
7. தேறவே அரங்கன் காட்டுகின்ற
தெய்வபலமிக்க வழிமுறைகள்
அறமாக அகிலமெல்லாம் நிரம்ப
ஆற்றல்கூடி ஞான பூமியாக மாறும்
8. மாறவே இந்த பேருலகில்
மகான்கள் படை பெருகிட
கூறவே எங்கும் தரும ஞான
குறைவிலா ஞான ஆட்சியாக
9. ஆகத் தலைமைகள் உருவாகி
ஆறுமுகனார் அனுகூலம் பெற
செகத்தின் ஆட்சியாக மாறி
சேவைக்கு பஞ்சமில்லா வண்ணம்

10. வண்ணமுடன் அரங்கன் நோக்கம்
வரமாக வெற்றி கண்டிட
எண்ணமெல்லாம் சீடர்கட்கு
இணையிலா அழியாமை கூடி

11. கூடியே ஞானிகளின் ஆட்சி
குருபரன் வேலவன் ஆட்சியாக
நாடெங்கிலும் பரவி மாற்றம் பெறும்
நாட்டிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–